8. அறிவிப்புகள்.

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 12–45

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்.)

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல்.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.